INTERNATIONAL TRUTH AND JUSTICE PROJECT

W ITJPSL.COM
E ITJPSL@GMAIL.COM

EXECUTIVE DIRECTOR:
YASMIN SOOKA

ஊடக அறிக்கை: ஒரு நாளில் இலங்கையில் வலிந்து காணாமற்போனவர்களின் 280 பெயர்களைப் பட்டியலிடும் ITJP இன் புதிய இணையத்தளம்

15 மே 2018

ஜேகானஸ்பேர்க்: காணாமல் போனவர்களுக்கான இலங்கையின் அலுவலகமானது 2009 இல் இடம்பெற்ற சிவில் யுத்தத்தின் இறுதிநாட்களில் இடம்பெற்ற நூற்றுக்கணக்கான வலிந்து காணமல்போதல் சம்பவங்கள் தொடர்பில் அவை பற்றிய உண்மையை கண்டறிய விரும்பினால் இந்த சம்பவங்கள் பற்றி யுத்தகால இராணுவத் தலைவர்களை விசாரணை செய்யும் தார்மீகக் கடப்பாட்டை கொண்டுள்ளது. இவ்வாறு காணமற்போனவர்களில் குறைந்தது 25 தமிழ்ப் பிள்ளைகளும் உள்ளனர். இவர்கள் 18 மே 2009 அன்று அல்லது அதற்கு அண்மைய நாட்களில் இவர்களின் குடும்பங்களுடன் இலங்கை இராணுவத்தின் பாதுகாப்பில் இறுதியாக காணப்பட்டுள்ளார்கள். இவை சர்வதேச சட்டத்திற்கிணங்க பொதுவான வலிந்து காணாமல் போதல் சம்பவங்களாக கருதப்படுகின்றன.

*"இலங்கையின் வரலாற்றில் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் பல்வேறு கண்ணால் கண்ட சாட்சிகளைக் கொண்டுள்ளதுடன் பல நூற்றுக்கணக்காகன மக்கள் ஒரே நேரத்தில் ஒரே இடத்தில் பெரியதொரு தனிக்குழுவாக வலிந்து காணமல் போனமை இதுவாகும் என சர்வதேச உண்மைக்கும் நீதிக்குமான செயற்திட்டத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளரான ஜஸ்மின் சூக்கா தெரிவித்துள்ளார். வலிந்து காணமல் போதல் தொடர்பில் பொறுப்புக்கூறுவதில் உண்மையில் அவர்கள் அக்கறை உள்ளவர்களாக இருந்தால் இந்த சம்பவத்தை அவர்கள் முதலில் விசாரிக்க வேண்டும் என காணாமல் போனவர்களுக்கான அலுவலகத்திற்கு நாங்கள் எழுதியிருக்கின்றோம். சரணடைதல்களை தனிப்பட்ட ரீதியில் அவதானித்துக் கொண்டிருந்ததாக கண்ணால் கண்ட சாட்சியாளர்களால் கூறப்படும் மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா மற்றும் ஜெனரல் ஜெகத் ஜெயசூரியா மற்றும் காணமல் போனவர்களை தமது பாதுகாப்பில் பொறுப்பெடுத்துக் கொண்ட பாதுகாப்பு படையினர்களையும் விசாரிக்க ஆரம்பிக்கலாம்''*

இலங்கையில் ஆட்கொணர்வு மனுவைத் தாக்கல் செய்த குடும்பங்களுக்கு போரின் இறுதி நாட்களில் சரணடைந்தவர்களின் பட்டியலைக் கையளிப்பதற்கு இலங்கை இராணுவத்தின் 58 ஆவது படைப்பிரிவு தொடர்ந்தும் மறுத்து வருகின்றது. 58ஆவது படைப்பிரிவு சரணடைந்தவர்களை தனது பிடிக்குள் எடுத்துக் கொண்கொண்டிருந்ததாக ஐ.நா விசாரணையில் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளதுடன் இந்த படையணியை போர் குற்றவாளியான மேஜர் ஜெனரல் சவேந்திர சில்லா அந்த நேரத்தில் வழிநடத்திச் சென்றார். அவர் தற்போதைய அரசாங்கத்தினால் இலங்கை இராணுவத்தின் உதவி ஜெனரலாக பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளார். மே 18 அன்று சில்வா வட்டுவாகல் பாலத்தடியில் பிரசன்னமாகியிருந்ததாகவும் சரணடைந்த பின்னர்

உடனடியாகவே படுகொலை செய்யப்பட்ட LTTE யின் அரசியல் பிரிவு தலைவர்களுடன் கூட கைகுலுக்கு கொண்டதாகவும் கண்ணால் கண்ட சாட்சியாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். சில்வா ஜெனரல் ஜெயசூரியாவிற்கு கீழ் பணியாற்றியதுடன் ஜெயசூரியாவும் வட்டுவாகல் பாலத்தடியில் பிரசன்னமாகியிருந்ததுடன் கத்தோலிக்க பாதிரியார் தலைமையில் LTTE போரரிளிகளின் சரணடைவுகளை அவதானித்துக் கொண்டிருந்ததாகவும் கண்ணால் கண்ட சாட்சிகளால் கூறப்படுகிறது. அவ்வாறு சரணடைந்தவர்கள் அனைவரும் பின்னர் பாதுகாப்பு படையினரின் பாதுகாப்பில் இருக்கும் போதே காணமற்போய்விட்டார்கள். நீதிக்குப் பயந்து நாட்டுக்கு தப்பிப் போகும் வரை இலத்தீன் அமெரிக்கா நாட்டில் தூதுவராக இருந்த ஜெனரல் ஜெயசூரியாவிற்கு எதிராக ITJP யினால் போர்க்குற்றங்கள் தொடர்பில் 04 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

ITJP இனுடைய காணாமற்போனவர்களுக்கான இணையத்தளமானது இலங்கை இராணுவம் கொடுக்கமறுக்கின்ற சரணடைந்தவர்களின் பட்டியலை மீண்டும் உருவாக்கின்றது. அது தற்போது **280** பெயர்களைக் கொண்டுள்ளதுடன் அதனை http://itjp.bong.international/#lang=english என்ற இணையத்தள முகவரியில் தமிழிலும் ஆங்கிலத்திலும் பார்வையிடலாம்.

*"தகவல்கள் அல்லது படங்கள் வைத்திருப்பவர்கள் மின்னஞ்சல் மூலம் தமிழில் அல்லது ஆங்கிலத்தில் எங்களைத் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்வதாக ITJP இன் நிறைவேற்றுப் பணிப்பாளர் ஜஸ்மின் சூக்கா தெரிவித்தார். இது எந்த வகையிலும் ஒரு பூரணமான அல்லது நேர்த்தியான பட்டியலோ இல்லை ஆனால் இது ஒரு ஆரம்பமே அத்துடன் முன்னர் அறிந்ததை விட இழைக்கப்பட்ட குற்றத்தின் அளவு மிகவும் பெரியது என்பதை இது வெளிப்படுத்துகின்றது."*

சொந்தப் பெயர்களைப் பாவித்து காணாமற்போன அன்புக்குரியவர்களை அவர்களது குடும்பங்கள் பதிவு செய்துள்ள அதேவேளையில் அவர்களது முன்னாள் சகபாடிகள் அமைப்பில் பயன்படுத்தப்பட்ட அவர்களின் பெயர்களைப் பயன்படுத்தும் போக்கை கொண்டிருப்பதால் சில பெயர்கள் ஒன்றுக்கு மேற்பட்ட தடவைகள் இருக்கலாம் என்பதை ITJP ஒத்துக்கொள்கிறது. இதனால் சாத்தியமான வகையில் படங்களை இணைத்துக் கொள்வது முக்கியம் என இந்த அமைப்பு தெரிவிப்பதுடன் ஏதாவது திருத்தங்கள் இருப்பின் தங்களைத் தொடர்பு கொள்ளுமாறும் பொதுமக்களை கேட்டுக் கொள்கின்றது. இந்த தளத்தின் வடிவமைப்பின் போது சாம்பல் நிறப் பெட்டிகள் வேண்டுமென்றே விடப்பட்டுள்ளமையானது இது இறுதிவடிவம் பெற்ற பட்டியல் இல்லை என்பதைவிட தொடர்ந்தும் வேலைகள் நடைபெற்று வருகின்றன என்பதையே குறிக்கின்றது.

ஒவ்வொரு பெயரும் வலிந்து காணாமல் போனவர் விட்டுச் சென்ற மனித அவலத்தின் ஒரு சிறிய கண்ணோட்டம் மட்டுமே. வே பாலகுமாரின் மகள் இந்த தளத்தில் தந்தையின் பக்கத்தில் உள்ளடக்கப்படவேண்டும் என்று இந்தச் செய்தியை அனுப்பியுள்ளார்:

*"நான் எப்போதும் உங்களுடன் இருக்க விரும்பினேன் அப்பா, நீங்கள் இல்லாமல் காயப்பட்ட இதயத்துடன் நாங்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். நீங்கள் முக்கியமான தமிழ் தலைவர்களில் ஒருவர் என்பதை எவரும் மறுக்க முடியாது. நீங்கள் எவ்வளவு புகழ்பெற்ற ஒரு தலைவராக அல்லது ஒரு நபராக இருந்தாலும் எவ்வாறு எழிமையாக வாழ்வது என்பதை எங்களுக்கு காட்டிய ஒரு சிறந்த தகப்பனாக இருந்ததுடன் ஒரு உதாரணமாகவும் வாழ்ந்தீர்கள் என்று நான் திடமாக கூறுகின்றேன். நீங்கள் எப்பொழுதும் நான் சுதந்திரமான , துணிவான மற்றும் எதையும் தாங்ககூடிய பலமான ஒரு பெண்ணாக இருக்க வேண்டும் என்று விரும்பினீர்கள். ஆனால் நீங்கள் காணாமற்போன பின்னர் அந்த துன்பத்தையும் மன அழுத்தத்தையும் என்னால் தாங்க முடியாதுள்ளது. எந்தச் சூழ்நிலைகளிலும் எதையும் விட்டுக் கொடுக்ககூடாது என்பதற்கு ஒவ்வொரு காரணத்தையும் எங்களுக்கு கொடுக்கும் பலமாக நீங்கள் இருக்கிறீர்கள். நாங்கள் உங்களை விட்டுக் கொடுக்கமாட்டோம் அப்பா. நாங்கள் உங்கள் பிரிவினால் மிகவும் வாடுகின்றோம் அத்துடன் அதனை விபரிக்க வார்த்தைகள் இல்லை. ஒரு நாளைக்கு உங்களுடைய பிரசன்னத்தால் எங்களுடைய கண்களை மகிழ்ச்சிக் கண்ணீரால் நிரப்புவீர்கள் என நாங்கள் பலமாக நம்புகின்றோம். அத்துடன் தமது அப்பாவை, மகனை, மகளை அல்லது உடன் பிறப்புக்களை இழந்த ஒவ்வொரு குடும்பமும் விரைவில் ஒன்றுசேரும் என்று நம்புவதுடன் அதற்காக பிரார்த்திக்கின்றேன்.*
*உங்களுடைய என்றும் அன்புள்ள மகள்."*

ITJP இனால் பெயரிடப்பட்டுள்ளவர்கள் 18 மே 2009 அன்று அல்லது அதை அண்டிய நாட்களில் காணாமல் போவதற்கு முன்னர் இலங்கை இராணுவத்தின் பிடிக்குள் கொண்டு செல்லப்பட்டதாக நம்பபடுகிறது. சிலர் காணமற்போய்விட்டதாக இலங்கையிலுள்ள அவர்களது குடும்பத்தினரால் அறிவிக்கப்பட்டுள்ளது. சாட்சியாளர்கள் வெளிநாட்டில் பல நாடுகளில் இருப்பதுடன் அவர்கள் இலங்கைப் படைகளிடம்[2] யார் சரணடைவதைப் பார்த்தார்கள் என்பது பற்றி ITJP யிடம் வாக்குமூலமும் கொடுத்திருக்கிறார்கள்.

ITJP யினுடைய இணையத்தளமானது இலங்கைக்குள் இருந்து பெறப்பட்ட இரண்டு பட்டியல்கள் , வெளிநாட்டில் சேகரிக்கப்பட்ட 2 பட்டியல்கள் , ஐ.நா WGEID இனால் வெளியடப்பட்ட 2017 ஆண்டு முறைப்பாட்டு பட்டியல் என 5 வெவ்வேறான பட்டியல்களை பிரதானமாக, அடிப்படையாக கொண்டுள்ளது. கவலை ஏற்படுத்தும் விடயம் என்னவெனில் இந்தப் பட்டியல்கள் பெரிதாக இல்லாமல் சிறிய அளவிலே ஒன்றுடன் ஒன்று ஒத்துப்போகின்றன. சிலசமயங்களில் LTTE போராளிகளின் சில குடும்பங்கள் அவர்கள் காணமற்போனதை அறிவிக்க பயப்பிடுகின்றார்கள் அல்லது குடும்பங்கள் முறைப்பாடு செய்வதற்கு உயிருடன் இல்லை என்பதை இது சுட்டிக்காட்டுகிறது.

குறிப்பாக கவலையை ஏற்படுத்துவது என்னவெனில் 29 சிறுபிள்ளைகள், இவர்களில் பலர் 5 வயதிற்கு உட்பட்டவர்கள் அத்துடன் மே 18 அன்று அல்லது அண்டிய நாட்களில் தமது பெற்றோர்களுடன் சரணடைந்த பின்னர் இவர்கள் காணமற்போயுள்ளார்கள்.

*“இலங்கைச் சிவில் சமூகம் ஒருமித்த குரலில் இந்தச் சிறுபிள்ளைகளின் துர்அதிஸ்டநிலை குறித்து அறிவதற்கு கோரிக்கைவிடுக்க வேண்டும். ஒன்பது ஆண்டுகள் கடந்துவிட்ட நிலையில் பாதுகாப்பு படைகளின் மிரட்டல்கள் அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் அவர்களுடைய பாட்டிமார்கள் உண்மையைக் கேட்டு வீதியில் ஓரத்தில் தனியாக நிற்கவிடப்படக்கூடாது என சூக்கா தெரிவித்தார்.”*

போரின் இறுதி நாட்களின் போது ஒலிபெருக்கி மூலம் தமிழர்களை சரணடையுமாறும் அவர்களுக்கு பொதுமன்னிப்பு[5] வழங்கப்படும் என்றும் உறுதியளித்து இலங்கை இராணுவம் அறிவிப்புக்களை மேற்கொண்டது. ஐ.நாவின் அறிக்கை கூறுவது போல காணாமற்போனவர்களில் சிலர் ஏற்கனவே ஆயுதப்படையினரின் பாதுகாப்புக்குள் சென்றிருந்தார்கள் அத்துடன் அவர்கள் போரிடத்தகுதியற்ற நிலையில் இருந்தார்கள் என்பதால் அவர்கள் LTTE யின் சண்டைப் போராளிகளாக இருந்தார்களா அல்லது இல்லையா என்பது இங்கு பொருத்தமானதல்ல. போரின் முடிவில் காணாமல் போதல்கள் பற்றிய ஐ.நா OISL இன் அறிக்கையின் பகுதியை நாங்கள் கீழே மீள்பிரதி செய்கின்றோம்.//

---

CHRD இன் ஆதரவு தேடலின் இருந்து பெற்றுக் கொண்ட பாடங்கள் , 2015,http://srilankachrd.org/assets/book-a.pdf

[5] கொழும்பிலுள்ள CHRD இனால் வலுச்சேர்க்கப்படுவதுடன் அதனுடைய அறிக்கை தெரிவிப்பதாவது :

” 18 மே 2009 இல் இலங்கைப்பாதுகாப்பு படைகள் எல்லா டுவுவுு போராளிகளையும் சரணடையுமாறு பகிரங்க அறிவிப்புக்கள் மேற்கொண்டார்கள், அத்துடன் சரணடைந்தவர்களுக்கு பொதுமன்னிப்பு என்றும் உறுதிகூறினார்கள். ஒரு நாள் கூட சேவையாற்றியிருந்தால் அவர்கள் இராணுவத்திடம் சரணடைய வேண்டும் என்றும் அறிவிப்பில் சொல்லப்பட்டது.
அதன்பின்னர் , மேலே பட்டியலிடப்பட்டுள்ள காணாமற் போன நபர்களும் இலங்கை இராணுவத்தின் 58 ஆவது படைப்பிரிவினரிடம் சரணடைந்தார்கள்.”

[6] OISL, 2015, பத்தி 286, A/HRC/30/CRP.2.

OSIL அறிக்கையிலிருந்து பிரித்தெடுபக்கப்பட்ட பகுதி *(A/HRC/30/CRP.2)*

***ஆயுதப் போரின் இறுதிக் கட்டத்தின் போது வலிந்து காணாமற்போதல்கள்***

***429.*** *அரசாங்கத்தின் தொடர்ச்சியான மறுப்புக்களுக்கு[7] மத்தியில், 18 மே 2009 இல் இலங்கை இராணுவத்திடம்[9] சரணடைவதற்காக[8] வட்டுவாகல் பாலத்தைக் கடந்து சென்ற ஆயுதங்களை கீழே போட்ட LTTE சண்டைப் போராளிகள், இராணுவப்பிரிவைச் சாராத LTTE போராளிகள் அவர்களுடைய நண்பர்கள் மற்றும் குடும்ப உறுப்பினர்கள் என கணிசமான அளவு ஆட்கள் காணாமற்போனமை பற்றிய குற்றச்சாட்டுக்களை உறுதிப்படுத்தும் நம்பத்தகுந்த தகவல்கள் வெளிவந்துள்ளன.*

***430.*** *இந்த சில சம்பவங்கள் WGEID இற்கு அறிவிக்கப்பட்டிருப்பதுடன் அவை பற்றி 2012 மற்றும் 2014[7] இற்குரிய வருடாந்த அறிக்கைகளிலும் உள்ளடக்கப்பட்டுள்ளது. முன்னாள் LTTE போராளிகள் அல்லது பொதுமக்கள் சரணடைந்து அதிலிருந்து[8] காணமற்போனமை தொடர்பில் அவர்கள் சரணடைந்ததை நேரடியாகப் பார்த்ததாகச் சொல்லப்படும் மக்களிடமிருந்து பெறப்பட்டவைகள் உட்பட வேறு வாக்குமூலங்களையும் OISL பெற்றுள்ளது. LLRC ஆனது போரின் இறுதி நாட்களில் சரணடைந்து அதனுடைய அறிக்கை[9] வெளிவந்த காலப்பகுதியில் காணாமற் போனதாக சொல்லப்பட்ட 53 வரையான LTTE போராளிகளின் விபரங்களைப் பதிவு செய்துள்ளது. மே மாதம் 2015 இல் சர்வதேச உண்மைக்கும் நீதிக்குமான செயற்திட்டம் இலங்கை என்ற அமைப்பானது 18 மே 2009[7] அன்று அல்லது அதை அண்டிய காலப் பகுதியில் இலங்கை இராணுவத்திடம் சரணடைந்த 110 நபர்களின் பெயர்களை வெளியிட்டுள்ளது. இவர்கள் சரணடைவதை கண்ட சாட்சிகளும் உள்ளன.*

***431.*** *ஆரம்பக்கட்ட விசாரணையின் பின்னர் முல்லைத்தீவில் வேலியடைக்கப்பட்ட பகுதியில் வைக்கப்பட்டிருந்த போது தமது சில குடும்ப உறுப்பினர்களை இராணுவத்தினர் அல்லது தமிழ் ஒட்டுக்குழுவைச் சேர்ந்தவர்கள் வந்து கூட்டிச் சென்றதாக OISL இற்கு சாட்சியாளர்கள் தெரிவித்துள்ளார்கள். LTTE உடனான தமது தொடர்பினை ஒத்துக் கொண்டவர்கள் அங்கிருந்து கொண்டு செல்லப்படும் முன்னர் அவர்களது குடும்பங்களில் இருந்து விலக்கப்பட்டு தனியான வரிசைகளில் கொண்டு போய்விடப்பட்டதாக OISL இற்கு சொல்லப்பட்டுள்ளது.*

***432.*** *தாங்கள் அல்லது தங்களிடமிருந்து வேறாக்கப்பட்டவர்கள் எங்கு கொண்டு செல்லப்படுவார்கள் என்பது பற்றிய எந்த தகவல்களையும் பாதுகாப்பு படையினர் கொடுக்கவில்லை என சாட்சியாளர்கள் OISL இற்கு தெரிவித்துள்ளார்கள். சாட்சியாளர்கள் ( மனைவிகள், தாய்மார், பாட்டன் பாட்டிகள்) 2 வயதிற்கும் 10 வயதிற்கும் இடைப்பட்ட 5 பிள்ளைகள் உட்பட தமது அன்புக்குரியவர்கள் கொண்டு செல்லப்படுவதை கண்டுள்ளார்கள்.*

***433.*** *18 மே இல் கத்தோலிக்க மதகுருவான பாதிரியார் பிரான்சிஸ் ஜோசப் தலைமையில் ஒரு குழுவினர் சரணடைந்த சம்பவமானது மிகவும் விரிவாக ஆவணப்படுத்தப்பட்டுள்ளது. அன்று காலை பாதிரியார் பிரான்சிஸ் உடன் வட்டுவாகலில்[9] வைத்து இலங்கை இராணுவத்திடம் தங்களை அடையாளங்காட்டிய LTTE யின் சண்டைப் போராளிகள் மற்றும் இராணுவப் பிரிவைச் சாராத போராளிகள் என ஒரு குழுவினை குறிப்பிட்ட எண்ணிக்கையான சாட்சியாளர்கள் பார்த்துள்ளார்கள்.*

---

7 ஜனவரி 2013 இல் போரின் இறுதியில் பாதுகாப்பு படையினரிடம் சரணடைந்த எந்தவொரு LTTE போராளியும் காணாமற்போகவில்லை என பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ச ஜனவரி 2013 இல் தெரிவித்தார். அவர்கள் அனைவரும் சரியான முறையில் புனர்வாழ்வு நிகழ்சித்திட்டத்திற்கு உட்படுத்தப்பட்டதுடன் சமூகத்துடனும் ஒன்றிணைக்கப்பட்டனர் என்று அவர் தெரிவித்தார்., இலங்கை சுருக்கம் LTTE யில் இருந்து சரணடைந்த எவரும் காணாமற்போகவில்லை.- கோத்தபாய ராஜகபக்ச , 25 ஜனவரி 2013, http://srilankabrief.blogspot.ch/2013/01/no-ltte-surrendee-went-missing-gotabaya.html

8 «சரணடைதல் » என்ற பதமானது ஒரு ஆயுதக்குழுவின் உறுப்பினர்கள் சரணடைவதைக் குறிக்கும். LTTE போராளிகள் இராணுவப்பிரிவையா அல்லது அரசியற் பிரிவையா சேர்ந்தவர்கள் என்பது தெளிவாக இல்லாவிட்டாலும் அது இங்கே பாவிக்கப்பட்டிருக்கிறது.

9 இந்தச் சம்பவங்கள் முன்னைய அத்தியாயத்தில் விபரிக்கப்பட்ட நீதிக்குப் புறம்பான கொலைகளுடன் தொடர்புபட்டதாக இருக்கலாம்.

10 WGEID இன் வருடாந்த அறிக்கை 2012, A/HRC/19/58/Rev.1 pages1pages 111-113.

11 கோப்பிலுள்ள வாக்குமூலம். OISL பெரும் எண்ணிக்கையான சமர்ப்பித்தல்களை பெற்றுக் கொண்டது.

12 LLRC அறிக்கை , பத்தி. 1.49: புனர்வாழ்வு ஆணையாளருக்கு இணங்க, 11954 முன்னாள் LTTE போராளிகள் சரணடைந்த பின்னர் அல்லது பிடிக்கபட்டபின்னர் புனலர்வாழ்வு பெற்றுவருகின்றனர் என்று இந்த ஆணையகம் விளங்கிக் கொள்கிறது.

13 சர்வதேச உண்மைக்கும் நீதிக்குமான செயற்திட்டம் இலங்கை :பாதுகாப்பில் இருக்கும் போது காணாமற்போதல்கள் ஆறுவருடங்களுக்கு முன்பு இன்று , 18 மே 2015,http://tamilsforum.co.uk/wp-content/uploads/2015/05/Statement-18-May-2015-ITJP-SL-Disappearances.pdf

14 கோப்பிலுள்ள வாக்குமூலம்

15 கோப்பிலுள்ள வாக்குமூலம்

16 கோப்பிலுள்ள வாக்குமூலம்

17 கோப்பிலுள்ள வாக்குமூலம்

18 கோப்பிலுள்ள வாக்குமூலம்

***434.*** *LTTE போராளிகள் சரணடைவதை பல சின்னங்களையும் தன்னைச் சூழ பலத்த பாதுகாப்பையும் கொண்டிருந்த மூத்த பாதுகாப்புபடை அதிகாரி என நம்பப்படும் ஒருவருடனும் மற்றும் பாதுகாப்பு படை உறுப்பினர்களுடனும் நேரடியாக அவர் சரணடைதலுக்கான ஒழுங்குகளை செய்வதை கண்டுள்ளனர்.*

***435.****சிறிது நேரத்தின் பின்னர் பாதிரியார் பிரான்சிஸ் மற்றும் குழுவினர் பாதுகாப்பு படையினரால் முல்லைத்தீவில் ஆரம்ப விசாரணை மையத்திற்கு அருகாக உள்ள முதலுதவி மையத்திற்கு இடப்புறமாக இருந்த வீதி வழியாகவும் தெற்குபக்க[7] வீதி வழியாகவும் கொண்டு செல்லப்படுவதை சாட்சியாளர்கள் கண்டுளார்கள். சில சாட்சியாளர்கள் பாதிரியார் பிரான்சிஸ் மற்றும் அந்த குழுவினர் இறுதியாக ஆட்களை வைத்திருந்த பகுதியின் கிழக்குப் பக்கமாக பேருந்துகளில் ஏறுவதைக் கண்டுள்ளார்கள். அப்போதிலிருந்து பாதிரியார் பிரான்சிஸ் இற்கோ அல்லது அந்த குழுவில் இருந்த ஏனையவர்களையோ காணவும் இல்லை அவர்களிடமிருந்து எந்த தகவலும் இல்லை.*

***436.*** *5 பிள்ளைகள் உட்பட 22 நபர்களின் சார்பாக 13 வவுனியா மேல் நீதிமன்றிலும் ( 05 20 மார்ச 2013 இலும் ஏழு 22 ஆகஸ்ட் 2013 இலும் ஒன்று 23 மே 2014 இலும்) யூன் 2015 இல் மன்னார் உயர் நீதி மன்றில் ஒன்று எனவும் 14 ஆட் கொணர்வு மனு முறைப்பாடுகள் இதுவரைப் பதியப்பட்டுள்ளன. ஆந்த 22 பெயரும்: பாதிரியார் பிரான்சிஸ் ஜோசப், முரளிதரன் நடேசு, அவருடைய மனைவி முரளிதரன் கிருஸ்ணகுமாரி மற்றும் இரண்டு இளம் பிள்ளைகள், மகாலிங்கம் சின்னத்தம்பி ( இளம்பருதி), அவருடைய மனைவி மகாலிங்கம் சிவனி மற்றும் அவர்களுடைய 10 , 08 மற்றும் 3 வயதுப் பிள்ளைகள் , சின்னத்துரை சசிதரன் (எழிலன்) , செல்லையா விஸ்வநாதன், பொன்னம்பலம் கந்தசாமி, உருத்திரமூர்த்தி கிருஸ்ணகுமார், கந்தசாமி துசிசங்கர், தியாகராஜா மினேஸ், நடேசமூர்த்தி விஸ்ணுகுமார், மகேந்திரம் முருகதாஸ், தங்கபாலசிங்கம் விஸயபாஸ்க்கர், சிவஞ்ஞானம் கோபாலரட்ணம், அவரது மனைவி சிவலிங்கம் பத்மலோசினி, காளிமுத்து சஜீவன் மற்றும் வி. பாலகுமாரன்.*

***437.****இரண்டு சந்தர்ப்பங்களில் மே 18 இல் முல்லைத்தீவில் கடைசியாக மற்றயவர்களுடன் ஆட்களை ஆட்களை வைத்திருந்த பகுதியில் இவர்களும் காணப்பட்டுள்ளனர். மே 18 இல் ஓமந்தையில் வைத்து ஒருவர் கொண்டு செல்லப்பட்டுள்ளார். இன்னுமொருவர் காயப்பட்டிருந்தமையால் முல்லைத்தீவில் ஆட்களை வைத்திருந்த பகுதியில் இருந்து உழவு இயந்திரத்தில் கொண்டு செல்லப்பட்டுள்ளார். காணாமற் போனவர்கள் இறுதியாக இலங்கை இராணுவத்தின் 58 ஆவது பிரிவின் பாதுகாப்பில் காணப்பட்டதாக எல்லா முறைப்பாடுகளும் தெரிவிக்கின்றன.*

***438.*** *இந்த முறைப்பாடுகளுக்கு பதிலளிக்கையில்,* *தாங்கள் எவரையும் கைது செய்யவுமில்லை தடுத்து வைக்கவும் இல்லை என இலங்கை இராணுவம் கூறியுள்ளது. சில சந்தர்ப்பங்களில் தாங்கள் சட்டரீதியான முறையில் செயற்பட்டதுடன் இராணுவத்தால் விடுவிக்கப்பட்ட பகுதிகளுக்கு வந்த பொதுமக்களின் பாதுகாப்பையும் நலன்களையும் உறுதிப்படுத்தியுள்ளோம் என அது பதிலளித்துள்ளது. மற்றைய சந்தர்ப்பங்களில் எல்லா நேரங்களிலும் இலங்கை ஆயுதப்படையினர் பொருத்தமான சர்வதேச போர் முறை நியமங்களையும் பின்பற்றியதாக பதிலளித்துள்ளது. காணாமற் போனவர்களில் பலர் இராணுவத்துடனான மோதல்களில் இறந்துவிட்டார்கள் அல்லது சட்டவிரோதமாக நாட்டை விட்டு தப்பிச் சென்று மேற்கத்தேய நாடுகளில் வாழ்ந்துவருகிறார்கள் எனவும் கூறியுள்ளது.*

***439.*** *குறிப்பாக யுத்தத்தின் இறுதி நாட்களின் போது இலங்கை இராணுவத்திடம் சரணடைந்து அல்லது கைது செய்யப்பட்டு காணாமற்போனதாக சொல்லப்படும் டுவுவு போராளிகளின் எண்ணிக்கை தொடர்பில் டுடுசுஊ தனது அறிக்கையில் ஆழ்ந்த கரிசனையை வெளியிட்டுள்ளது. இந்தப் போராளிகளின் குடும்ப உறுப்பினர்கள் தெரிவிக்கையில் தாங்கள் தமது கணவன்மாருடன் இராணுவ நிலைகளுக்குச் சென்ற போது தமது கணவன்மாரை விசாரிக்க வேண்டும் என்று சொல்லப்பட்டு அவர்கள் தடுத்து வைக்கப்பட்டதுடன் குடும்ப உறுப்பினர்களை அகதி முகாம்களுக்குச் செல்லுமாறு கேட்கப்பட்டார்கள். வேறு சில சந்தர்ப்பங்களில் தமது கணவன்மார்கள் இராணுவத்திடம் சரணடைவதை மனைவிமார் கண்டுள்ளார்கள். இந்த ஆணைக்குழுவும் குடும்பமாக இராணுவத்திடம் சரணடைந்த சந்தர்ப்பங்கள் பற்றி கேட்டறிந்து கொண்டது. இந்த விபரணங்களின் அடிப்படையில் இலங்கை இராணுவத்திடம் தமது கணவன்கள் சரணடைதை இறுதியாக மனைவிமார் கண்டதும் அதிலிருந்து அவர்களிடமிருந்து எந்த தகவல்களும் இல்லை அல்லது அவர்களை பார்க்கவுமில்லை என்பதே மாறாத விடயமாக வெளிவருகின்றது.*

***440.*** *இது போன்ற குறிப்பிட்ட குற்றச்சாட்டுக்கள் பற்றி தேவையான விசாரணைகளை மேற்கொள்வது அரசாங்கத்தின் தெளிவான கடைமை என்பதையும் அத்துடன் இவ்வாறான விசாரணைகளின் போது இராணுவத்தைச் சேர்ந்தவர்கள் ஏதாவது சட்டத்திற்கு முரணான நடவடிக்கையில் ஈடுபட்டதற்கான ஆதாரங்கள் கிடைக்கப்பெறும் பட்சத்தில் தவறிழைத்தவர்கள் மீது சட்டநடவடிக்கை எடுப்பதுடன் அவர்கள் தண்டிக்கப்பட வேண்டும் என டுடுசுஊ வலியுறுத்துகின்றது. ஆகவே இந்தச் சம்பவங்கள் பற்றி முழுமையான விசாரணைகளை மேற்கொள்வது முக்கியமாகும்.[7]*

***441.****பிடித்துச் சென்றவர்கள் எங்கு இருக்கின்றார்கள் மற்றும் அவர்களுக்கு என்ன நடந்தது பற்றிய சம்பவங்கள் தொடர்பில் நம்பக்கூடிய வகையில், விரிவான மற்றும் சுயாதீன விசாரணைகளை அரசாங்கம் மேற்கொண்டிருப்பதாக தெரியவில்லை. சில சந்தர்ப்பங்களில் பாதிக்கப்பட்டவர்கள் இராணுவத்தால் பிடித்துச்*

*செல்லப்படுவதை சாட்சியாளர்கள் கண்ட போதும் அவர்கள் யுத்தத்தில் கொல்லப்பட்டுவிட்டதாக அரசாங்கம் கூறுகின்றது.*

***442.*** *ஆயுதப் போரின் இறுதிக்கட்டத்தின் போது எத்தனை பேர் காணாமற்போனார்கள் என்பது தெளிவில்லாமல் உள்ளது. யுத்தம் நடைபெற்ற பகுதிகளைவிட்டு வெளியே வந்தவர்களை பதிவு செய்து கொள்வதற்கும், அவர்களை டுவுவுநு போராளிகள் மற்றும் பொதுமக்கள் என்றவகையில் பிரிப்பதிலும் இருந்த வெளிப்படையற்ற தெளிவற்ற நடைமுறைகள் காணாமற்போதல்களுக்கு வழிவகுத்த ஒரு மேலதிக காரணியாகும். ஆரம்ப சோதனைகள் மற்றும் அதைத் தொடர்ந்தான தடுத்து வைப்புக்கள் சுயாதீனமான முறையில் தொடர்ச்சியாக கண்காணிக்கப்படவில்லை. அதன்விளைவாக எண்ணிக்கைகள் தெளிவாக இல்லாமல் இருப்பதுடன் போரின் இறுதிக்கட்டதின் போது கைது செய்யப்பட்ட மற்றையவர்கள் தொடர்ந்தும் உள்ளெடுக்கபடாமல் உள்ளதா என்பது பற்றி ஒரு சரியான முடிவை மேற்கொள்ளமுடியாதுள்ளது.*

***443.*** *OISL இல் உள்ள தகவல்களை கருத்திற் கொண்டு , போரின் முடிவின் போது சரணடைந்த கணிசமான எண்ணிக்கையான டுவுவுநு போராளிகளுக்கு என்ன நடந்தது என்பது தெரியாமல் உள்ளது அத்துடன் தமது அன்புக்குரியவர்கள் தொடர்ந்தும் காணாமற்போயுள்ளவர்கள் எனக் குறிப்பிட்ட எண்ணிக்கையான சாடசியாளர்கள் வாக்குமூலம் அளித்துள்ளார்கள். சரணடைந்தவர்கள் எனப்பதிவு செய்யப்பட்டுள்ள நபர்களின் பட்டியல்கள் ஒவ்வொருவருக்கும் என்ன நடந்தது என்பதை தெளிவுபடுத்தும் முகமாக சுயாதீனமானமுறையில் மீள்பார்வை செய்யப்படுவது அவசியம் என OISL நம்புகின்றது.*

---

18 மே 2009 இல் சரணடைவுகளின் எண்ணிக்கை தொடர்பான ITJP இன் கால ஒழுங்கு

2011: மனித உரிமைகள் கண்காணிப்பகம் 20 சம்பவங்கள் பற்றி அறிவித்துள்ளது.

2011: போரின் இறுதி நாட்களின் போது சரணடைந்து காணமற்போனதாக சொல்லப்படும் 53 LTTE போராளிகளை LLRC பதிவு செய்துள்ளது.

**2014:** 18 மே 2009 இனை அண்டிய நாட்களில் இலங்கை இராணுவத்திடம்சரணடைவதைக் சரணடைவதை சாட்சிகள் கண்ட 110 நபர்களின் பெயர்ப்பட்டியலை ITJP வெளியிட்டது. பின்னர் இது 143ஆக அதிகரித்தது.

**2018:** ITJP 280 பெயர்களைக் கொண்ட இணையத்தளத்தை ITJP வெளியிடுகின்றது.

**இலங்கையில்** காணமற்போனவர்கள் பற்றி குறிப்பிடப்படும் பல்வேறு எண்ணிக்கைகள்

**1994:** இலங்கையிலுள்ள 3 ஆணைக்குழுக்கள் 16800 வலிந்து காணமல் ஆக்கப்பட்ட சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதாக கண்டுபிடித்துள்ளது

**2015:** WGEID[7] தங்களிடம் 5750 முறைப்பாடுகள் நிலுவையிலுள்ளதாக தெரிவித்துள்ளது ( முன்னர் 12341)

**2017:** 20000 பேர் போரின் பின் காணாமல் போயுள்ளதாக அரசாங்கத்தின் கணிப்பீடுகள் தெரிவிக்கின்றன.

**2018**: SCRM 16000 பேர் காணாமல் போயுள்ளதாகவும் அதில் 5100 பேர் பாதுகாப்பு படையினர் என்றும் தெரிவிக்கின்றது.
இது ICRC இனால் பெற்றுக் கொள்ளப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை போன்று தெரிகின்றது

**2016:** பரணகம ஆணைக்குழுவானது 24000 முறைப்பாடுகளை பெற்றிருப்பதாக சொல்லப்படுகின்றது.

**2016:** ONUR என்ற அமைப்பின் தலைவர் 1994 ஆம் ஆண்டிலிருந்து 65000 பேர் காணாமல் போயுள்ளதாக தெரிவிக்கின்றார்.

**2018:** சர்வதேச மன்னிப்புச் சபை காணாமற் போனவர்களின் எண்ணிக்கை 100000 என்று கூறுகின்றது

முற்றும்

[7] A/HRC/30/38, 10 August 2015

INTERNATIONAL
TRUTH
AND JUSTICE
PROJECT